‘டம்மி’ முதல்வர் விஜய் அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து தென்சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!





“எல் நினோ” மழையின் தீவிர அபாயங்களை அலட்சியப்படுத்தி, மாநகராட்சிப் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும். தமிழ்நாடு அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் சென்னை தெற்கு சென்னை மேற்கு தென்மேற்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!” நடைபெற்றது. மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் நே.சிற்றரசு மயிலை த.வேலு, கழக கல்வியாளர் அணிச் செயலாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர்கள் மண்டலக்குழுத் தலைவர்கள் மாநகர்மன்ற உறுப்பினர்கள் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

வளர்ச்சியடைந்த

இந்தியாவைக் கட்டமைக்க இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும்!

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் பிறந்த நாளையொட்டி விடுத்த வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



சென்னை, அக். 16 -

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், “அப்துல்கலாம் அவர்கள் ஆசைப்பட்டபடி, வாய்ப்பு களையும் வளங்களையும் அனைத் துத் தரப்பினரும் சமமாகப்பெற்ற, வளர்ச்சி யடைந்த இந்தியாவைக் கட்டமைக்க இளைஞர்கள் உறுதியேற்க இந்நாளில் வேண்டுகிறேன்” என்று வலியுறுத்தி யுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

மிக எளிய பின்புலத்தில் பிறந்து, கற்ற கல்வியாலும் கண்ட கனவுகளா லும் இந்தியாவின் குடியரசுத் தலைவராய் உயர்ந்த பாரத ரத்னா திரு. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளில் அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

வறுமைதான் இந்தியாவின் எதிரியென ஆழ்ந்த நோக்கோடு கூறியவர் ஐயா அப்துல் கலாம் அவர்கள். அப்படி கூறியது மட்டுமில்லாமல், அறிவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு அந்த எதிரியை வென்றுவிட முடியும் என்றும் அவர் கனவு கண்டார்.

நமது ‘திராவிடமாடல்’ அரசில், அப்துல் கலாம் அவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் சிலை அமைத்ததோடு, அவரது பெயரிலான விருதினையும் ஆண்டுதோறும் வழங்கிப் போற்றினோம்.

அப்துல் கலாம் அவர்கள் ஆசைப்பட்டபடி, வாய்ப்புகளையும் வளங்களையும் அனைத்துத் தரப்பினரும் சமமாகப் பெற்ற, வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டமைக்க இளைஞர்கள் உறுதியேற்க இந்நாளில் வேண்டுகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மளிகைப் பொருட்களுக்கான செலவு மாதம் ரூ.2 ஆயிரம் அதிகரிப்பு!

விலைவாசி உயர்வால் தவித்து வரும் தமிழ்நாட்டு மக்கள்!

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக். 16 -

மளிகைப் பொருட்க ளுக்கான செலவு மாதம் ரூ.2 ஆயிரம் அதிகரித்துள் ளது. விலைவாசி உயர் வால் தமிழ்நாட்டு மக்கள் விழிபிதுங்கி தவித்து வரு கின்றனர் என்று ‘தினத் தந்தி’ நாளேடு தலையங் கத்தில் விமர்சித்துள்ளது.

ரி சர்வ் வங்கி, ரெப்போ வட்டி விகிதத்தை 5.25 சத வீதத்தில் இருந்து 5.5 சதவீ தமாக கடந்த வாரம் உயர்த்தியது. இதனால் வங்கிகளில் வாங்கிய வீட் டுக் கடன், வாகனக் கடன், தனிநபர் கடன் போன்ற வற்றுக்கான வட்டி விகி தம் உயரும் அபாயம் இருக்கிறது. நாட்டின் வளர்ச்சி விகிதம் சீராக இருந்தாலும், ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த் தியதற்கான காரணமாக பணவீக்கத்தை ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருந்தது. பணவீக்கம் என்றால் அனைவருக்கும் புரியும் வகையில் விலைவாசி உயர்வு என்று எளிமையா கக் குறிப்பிடப்படு கிறது.

ஒரு நாட்டில் பொருட் கள் மற்றும் சேவைகளின் விலை தொடர்ந்து உயர்வ தையே பணவீக்கம் என்கி றார்கள். இதனால் பணத் தின் வாங்கும் திறன் குறைகிறது.

அதாவது, முன்பு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கிய பொருட்களை



இப்போது வாங்குவதற்கு அதிகப் பணம் தேவைப்ப டுகிறது. ‘விலைவாசி உயர்வு’ என்று குறிப்பி டப்படுகிறது.

நாட்டின் விலைவாசி நிலவரத்தை மத்திய அர சின் புள்ளியியல் அமைச்ச கம் அவ்வப்போது ஆய்வு செய்து அறிவித்து வருகி றது. இதற்காகப் பல்வேறு பொருட்களின் “விலை களை ஆய்வு செய்து, நுகர்வோர் விலைக் குறி யீட்டு எண்ணை வெளியி டுகிறது. அதன்படி, கடந்த “செப்டம்பர் மாதத்தில் சில்லறைப் பணவீக்கம் 5.54 சதவீதமாக உயர்ந் துள்ளது. இது கடந்த 21 மாதங்களில் இல்லாத அள வுக்கு உயர்வாகும். இது அகில இந்திய சராசரி என் றாலும் தமிழ்நாட்டில் தான் மிக அதிகமாக 6.81 சதவீதமாக பதிவாகியுள் ளது. ஆக இந்தியாவி லேயே மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் விலை வாசி உயர்வு அதிகமாகும். யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரியில் 6.8 ஆக பண வீக்கம் இருக்கிறது. பண வீக்கம் 2 சதவீதத்தில் இருந்து 6 சதவீதத்துக்குள் இருக்கவேண்டும். அந்த அளவை தமிழகமும், புதுச் சேரியும் தாண்டிவிட்டன.

விலைவாசி உயர்வால் தமிழக மக்கள் தவித்துவரு கின்றனர். அடுத்து தீபா வளி உள்ளிட்ட பண்டி கைகள் நெருங்கி வருவ தால் என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

ராக்கெட் வேகத்தில் எகிறிய இந்த விலை வாசி உயர்வுக்கு உணவுப் பொருட்களின் விலை அதி கரித்திருப்பதுதான் முக்கி யக் காரணமாகும். உரு ளைக்கிழங்கைத் தவிர, கணக்கில் எடுத்துக்கொள் ளப்பட்ட மற்ற 41 அத்தி யா வசியப் பொருட்க ளின் விலையும் கணிசமாக உயர்ந்திருக்கிறது.

குறிப்பாக, வெங்காயத் தின் விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. சர்க்கரை, சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றின் விலையும் கூடியிருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும்போது, செப்டம் பர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 7.74 சதவீதமா கப் பதிவாகியுள்ளது.

அரிசி, துவரம் பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை மக்கள் வாங்காமல் தவிர்க்கவும் முடியாது. இவற்றின் விலை உயர்வுடன் காய்க றிகளின் விலை உயர்வும் சேரும்போது, குடும்பங்க ளின் மாதாந்திரச் செலவு கள் வரம்பை மீறிச் செல் கின்றன. இதனால் நடுத்த ரக் குடும்பங்கள் தங்கள் வருமானத்துக்குள் குடும் பச் செலவுகளை அடக்கமு டியாமல் சிரமப்படு கின் றன.

விலைவாசி உயர்வுக்கு சுட்டி பையன் எல் நினோ வின் ஆட்டத்தால் பருவ மழை பொய்த்தது முக்கி யக் காரணமாகும். விலைவாசி உயர்வு அனை வரையும் கடுமையாக பாதித்துள்ளது.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இல்லத்தரசி ஒரு வர், “மாதந்தோறும் வாங் கும் மளிகைப் பொருட்க ளுக்கான செலவு மட்டும் ரூ.2 ஆயிரம் அதிகரித்துள் ளது. காய்கறி விலை உயர் வையும் சேர்த்தால், இந்த மாதம் பற்றாக்குறை பட் ஜெட்தான். அடுத்து தீபா வளிச் செலவும் இருக்கி றது. எப்படித்தான் சமாளிக்கப்போகி றோமோ?” என்று வேத னையுடன் தெரிவித்தார்.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!



நெல்லை, அக்.16 -

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்கு ழுக் கூட்டம் அம்பாசமுத் திரம் சட்டமன்றத் தொகு திக்குட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர்,கழக செயலா ளர்கள் கூட்டம் நாளை (17.10.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத் தில் மாவட்டப் பொறுப் பாளர் இரா.ஆவுடையப் பன் தலைமையில், தலை மைக் கழக பிரதிநிதிகள் எஸ்.ஜோயல் , முத்துராஜா எம்.எல்.ஏ., ஆகியோர்கள் முன்னிலையில் நடை பெறுகிறது.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்தி ருப்பதாவது.

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் வ ழி காட் டு தலின் ப டி நாளை (17.10.2026 - சனிக் கிழமை) மாலை 5.00 மணி யளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடை பெறுகிறது.

இக் கூட்டத்தில் தலை மைக் கழகம் மூலம் வழங் கப்பட்டுள்ள படிவங்களில் ஒன்றிய செயலாளர்கள் தங்கள் ஒன்றிய பகுதியி லுள்ள கிளைகள் குறித்த விவரங்களையும் நகர, பேரூர் கழகச் செயலாளர் கள் தங்கள் பகுதிகளில் உள்ள வார்டுகள் குறித்த விவரங்களையும் முழுமை யாக பூர்த்தி செய்து தவறா மல் ஒப்படைக்க வேண் டும் என கேட்டுக்கொள் கிறேன்.

குறிப்பு: 1.A3 sheet அள வில் கலர் பிரிண்ட் எடுத்து வ டி வ த் தை நி ர ப் பி கொண்டு வரவும்.

2. படிவம் இணைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித் துள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான செயற்குழுக் கூட்டம் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழகப் பிரதிநிதிகள் புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுவை இரா.சிவா மற்றும் மாநில மாணவர் அணிச் செயலாளர் திருமதி. வீரமணி ஜெயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் தி.கௌதம் எம்.எல்.ஏ., இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், இரா.கண்ணப்பன், A.மாரிமுத்து, பிரேமா குப்புசாமி, சுவை சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கார்ப்பரேட் நிறுவனத்திற்கு மட்டும் ரூ.18,000 கோடிக்கு டெண்டர்!

முடிந்த ஒப்பந்தப் பணிகளுக்கு 80 சதவீதம் நிதி வழங்கவில்லை!

த.வெ.க. அரசு மீது ஒப்பந்ததாரர் சங்க மாநில பொதுச்செயலாளர் குற்றச்சாட்டு!

ஈரோடு, அக். 16 -

த.வெ.க. ஆட்சியில் புதிய பணிகளுக்கு கார்ப் ரேட் நிறுவனத்திற்கு மட் டும் ரூ.18 ஆயிரம் கோடிக்கு டெண்டர், ஏற் கனவே முடித்த பணிக ளுக்கு ஒப்பந்தாரர்க ளுக்கு 80 சதவீதம் வரை நிதி வழங்காமல் உள்ள தாக ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் குற் றம்சாட்டியுள்ளார்.

ஈரோட்டில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற் றும் நீர்வளத்துறை ஒப்பந் ததாரர்கள் நலச்சங்கத் தின் கோவை மண்டல கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் பங் கேற்ற சங்கத்தின் மாநில பொதுசெயலாளர் கார் மேகன் நிருபர்க ளுக்கு பேட்டி அளித்தார். அப் போது, அவர் கூறிய தா வது:

தமிழ்நாட்டில் ஒப்பந்த தாரர்களுக்கு நிதிகளை விடுவிக்காததால் கடந்த 4 மாதங்களில் கடுமையான மனஉளைச்சல் ஏற்பட் டுள்ளது

கட்டுமான பொருட்க ளின் விலை 40 முதல் 70% உயர்ந்துள்ளது. ரூ.10 கோடிக்கு மேல் உள்ள பணிகளுக்கு ஆன்லைன் டெண்டரை பெரிய கார்ப்ரேட் நிறுவனங் களுக்கும், ரூ.10 லட்சம் முதல் ரூ.30 லட்சத்திற் கும் மேற்பட்ட பணி களை சிறிய ஒப்பந்ததா ரர்களுக்கு ஆப்லைன் டெண்டர் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

புதிய அரசு அமைந்த தில் இருந்து ஏற்கனவே முடித்த ஒப்பந்த பணிக ளுக்கு தற்போது வரை 80 சதவீதம் வரை நிதி வழங் கவில்லை. கடந்த தி.மு.க. மற்றும் அதிமுக ஆட்சியி லும் 40 நாளுக்குள் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் உடன்தான் நிதியை வழங்கினர்.

இந்த ஆட்சியில் தற் போது, தரக்கட்டுப் பாட்டு சான்றிதழ் தாம தம் செய்து, நிதியை நிறுத்தி வைத்துள்ளனர்.

பொதுப்பணித்துறை அமைச்சரை 5 முறை பார்த்தும் கோரிக்கை அளித்தும் இதுவரை எவ் வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. டாடா, எல் அண்ட் டி போன்ற கம்பெனிகளுக்கு மட் டுமே டெண்டர் வழங்க வேண்டும் என தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் நினைக்கிறார்.

புதிய அரசு அமைந்த உடன், எல் அண்ட் டி நிறுவனத்திற்கு மட்டும் ரூ.18 ஆயிரம் கோடிக்கு டெண்டர் வழங்கப்பட் டுள்ளது.

இதனால், 38 மாவட் டங்களில் இருக்கும் ஒப் பந்ததாரர்கள் பாதிக்கப் பட்டு, வெளியேதான் நின்று கொண்டிருக்கி றோம்.

த.வெ.க. அரசு கடந்த ஆட்சியாளர்கள், கட்சி நிதி வாங்கினார்கள் என மட்டும் என குற்றம் சாட்டி பேசி வருவதால், கடந்த 4 மாதமாக தமிழ் நாட்டில் வளர்ச்சி பணி கள் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது.

போர்க்கால அடிப்ப டையில் நடக்கும் பணிக ளுக்கு ஆப்லைன் (நேரடி) டெண்டர் வழங்க வேண் டும். புதிய ஆட்சி அமைந் ததில் இருந்து ஒப்பந்ததா ரர்களுக்கு எவ்வித ஒப்பந்த பணிகளும் வழங் காததால் நாங்கள் பூஜ்ஜி யத்தில் இருக்கிறோம்.

ஒப்பந்ததாரர்களை முறையாக அழைத்து கருத்துக்களையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்து, நிறை வேற்ற வேண்டும். கோரிக்கை ஏற்காவிட் டால் மாநிலம் தழுவிய உண்ணாவிரத போராட் டம் சென்னை அல்லது சேலத்தில் நடத்த உள் ளோம்.

மேலும், மாநில தழு விய வேலை நிறுத்த போராட்டமும் நடத்த உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.